இந்து தமிழ் திசை – 17.01.2020

# டிஎன்பிஎல் சார்பில் சமுதாய பொங்கல் திருவிழா

■ கரூர்

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் (டிஎன்பிஎல்) சமுதாய நலப்பணித் திட்டத்தின் சார்பில், கரூர் மாவட்டம் புகழூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் சமுதாய பொங்கல் திருவிழா அண்மையில் நடைபெற்றது.

டிஎன்பிஎல் செயல் இயக்குநர் (இயக்கம்) எஸ்விஆர். கிருஷ்ணன் குத்துவிளக்கேற்றி விழாவை தொடங்கி வைத்துப் பேசினார். வேலாயுதம்பாளையம் இன்ஸ்பெக்டர் வேலுச்சாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். முதன்மை பொதுமேலாளர் (வணிகம் மற்றும் மின்சாரம் கருவியியல்) ஏ.பாலசுப்பிரமணியன், முதன்மை தகவல் அலுவலர் கே.மனோகரன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். முதன்மைப் பொதுமேலாளர் (மனிதவளம்) பா.பட்டாபிராமன் வரவேற்றார்.




▶▶ கரூர் மாவட்டம் புகழூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடந்த சமுதாய பொங்கல் திருவிழாவில் பெண்களுக்கு பொங்கல் பொருட்களை வழங்குகிறார் டிஎன்பிஎல் செயல் இயக்குநர் (இயக்கம்) எஸ்விஆர் கிருஷ்ணன். உடன், முதன்மை பொதுமேலாளர் (மனிதவளம்) பா.பட்டாபிராமன், முதன்மை பொதுமேலாளர் (வணிகம், மின்சாரம் மற்றும் கருவியியல்) ஏ.பாலசுப்பிரமணியன், முதன்மை தகவல் அலுவலர் கே.மனோகரன் உள்ளிட்டோர்.

இதில் ஆலையை சுற்றியுள்ள புகழூர், புஞ்சை புகழூர், புஞ்சை தோட்டக்குறிச்சி ஆகிய 3 பேரூராட்சிகள் மற்றும் புன்னம், வேட்டமங்கலம், நஞ்சை புகழூர், திருக்காடுதுறை, கோம்புபாளையம் ஆகிய 5 ஊராட்சிகள் மற்றும் காகித நிறுவன மனமகிழ் மன்றத்தைச் சேர்ந்த திராளான பெண்கள் கலந்து கொண்டு பொங்கல் வைத்தனர். அதற்கு தேவையான மண்பானை, சில்வர்வாளி, தட்டு, கரண்டி, அரிசி, பாசிபருப்பு, வெல்லம், முந்திரி, திராட்சை, ஏலக்காய், நெய் உள்ளிட்ட பொருட்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

விழாவில், திருவாரூர் சுர்ஜித் கலைக்குழுவினரின் நாட்டுப்புற கலை நிகழ்ச்சி நடைபெற்றது. புகழிமலை கோலாட்ட குழு குழந்தைகளின் கோலாட்டம் நடைபெற்றது. பாரம்பரிய விளையாட்டுகளான பம்பரம், பல்லாங்குழி, கோலிக்குண்டு, கயிறு தாண்டுதல், பாண்டியாட்டம், நொண்டியடித்தல், பறை இசை நடனம், கபடி ஆகிய விளை யாட்டுகள் நடைபெற்றன.